# வணிகவரித்துறை
# மானியக் கோரிக்கை எண். 10
# வணிகவரிகள்
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2009–2010

## முன்னுரை

வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை.
– திருக்குறள்

(பொருளுரை : பொருள் வரும் வழிகளை பெருகச் செய்து, அவற்றால் வளத்தை உண்டாக்கி வரும் இடையூறுகளை ஆராய்ந்து நீக்க வல்லவனே செயல் செய்ய வேண்டும்.)

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் இந்த மாநில அரசு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பல்வேறு நலத்திட்டங்களையும் பொருளாதார மற்றும் தொழில்துறை முன்னேற்றத்திற்கான உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. மேற்கூறிய இலக்கை முழு அளவில் அடைவதற்கு மாநில வருவாயை அரசு பெருக்க வேண்டி உள்ளது. மாநில வரி வருவாயில் 70 விழுக்காடு அளவிற்கு வணிகவரித்துறை ஈட்டி தருகிறது. இந்தியா முழுவதும் பொருளாதார வளர்ச்சியில் மந்த நிலை ஏற்பட்ட போதிலும், வணிகவரித்துறை 2008–09 நிதியாண்டில் ரூபாய் 22,570.12 கோடி வருவாய் ஈட்டி சென்ற 2007–08 நிதியாண்டை காட்டிலும் 13.12 விழுக்காடு வளர்ச்சி கண்டுள்ளது.

## 2. வணிகவரித் துறையில் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

வரி வசூல் பணியினை செயல்படுத்த கீழ்க்கண்ட சட்டங்கள் வணிகவரித்துறையினால் நிர்வகிக்கப்படுகின்றன :–

1. தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959 (31.12.2006 வரை)
2. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970 (31.12 2006 வரை)
3. தமிழ் நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 (1.1.2007 முதல்)
4. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956
5. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், 1939
6. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935
7. தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981

8. தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகன நுழைவு மீதான வரிச் சட்டம்,1990
9. தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் பொருட்கள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001 (இந்த சட்டம் செல்லாது என சென்னை உயர்நீதிமன்றம் 23.3.2007 நாளிட்ட தீர்ப்பில் அறிவித்தது)
10. தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம், 1983

## 3. கடந்த ஆண்டுகளின் வரிவருவாய் ஒப்பீடு

கடந்த ஆண்டுகளில் அனைத்து விற்பனை வரி சட்டம் மூலம் ஈட்டிய வரிவருவாய் விவரம் வருமாறு:

| ஆண்டு | வரிவருவாய் (ரூபாய் கோடியில்) | வளர்ச்சி விகிதம் |
|---|---|---|
| 2003–2004 | 11757 | 15.27 % |
| 2004–2005 | 13908 | 18.29 % |
| 2005–2006 | 16615 | 19.47 % |
| 2006–2007 | 19217 | 15.66 % |
| 2007–2008 | 19952 | 3.83 % |
| 2008–2009 | 22570 | 13.12 % |

## 4. கடந்த ஆண்டுகளின் வரிவருவாய் ஒப்பீடு –சட்டவாரியாக

சட்ட வாரியாக வருவாய் விவரம் வருமாறு :–

(ரூபாய் கோடியில்)

| சட்டம் | 2003–2004 | 2004–2005 | 2005–2006 | 2006–2007 | 2007–2008 | 2008–2009 |
|---|---|---|---|---|---|---|
| 1. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் | 9790 | 11462 | 13658 | 13416 | 429 | 293 |
| 2. தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் | –– | –– | –– | 2290 | 16472 | 19440 |
| 3. மத்திய விற்பனை வரிச் சட்டம் | 1186 | 1495 | 1799 | 2033 | 1744 | 1653 |
| 4. கேளிக்கை வரிச் சட்டம் | 75 | 59 | 44 | 25 | 16 | 12 |
| 5. பந்தய வரிச் சட்டம் | 5 | 6 | 6 | 6 | 6 | 6 |
| 6. ஆடம்பர வரிச் சட்டம் | 63 | 78 | 92 | 128 | 160 | 170 |
| 7. நுழைவு வரிச் சட்டம் (வாகனம் மற்றும் பொருட்கள்) | 638 | 808 | 1016 | 1319 | 1125 | 996 |
| மொத்தம் | 11757 | 13908 | 16615 | 19217 | 19952 | 22570 |

## 5. வருவாயும் செலவும்

வணிகவரித்துறையின் வருவாய் மற்றும் செலவு விவரங்கள் வருமாறு:-

**(ரூபாய் கோடியில்)**

| தலைப்பு | 2003–2004 | 2004–2005 | 2005–2006 | 2006–2007 | 2007–2008 | 2008–2009 |
|---|---|---|---|---|---|---|
| 1. வரிவருவாய் | 11757 | 13908 | 16615 | 19217 | 19952 | 22570 |
| 2. செலவுகள் | 93.70 | 102.34 | 110.44 | 128.52 | 143.73 | 187. 27 |
| 3. வரி வருவாயில் செலவின் விழுக்காடு | 0.80% | 0.74% | 0.66% | 0.79% | 0.72% | 0.83% |

## 6. மதிப்புக் கூட்டு வரி

நமது மாநிலத்தில் மதிப்புக் கூட்டு வரிமுறை 1.1.2007 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக வணிகர்கள் மற்றும் தொழிலகங்கள் இடையே மதிப்புக்கூட்டு வரி முறை தொடர்பான வழிமுறைகள் மற்றும் செயல்முறைகள் குறித்து விளக்கங்கள் அளிக்கப்பட்டன. மதிப்புக் கூட்டு வரி முறை வணிகர்கள் மற்றும் தொழிலகங்களுக்கு மிகவும் நன்மை அளிப்பதாகவும் ஒளிவு மறைவு அற்றதாகவும் இருப்பதால் அவர்கள் இந்த முறையை பெரிதும் வரவேற்றனர். டிசம்பர் 2006 முதல் மதிப்புக் கூட்டு வரிக்காக புதிய www.tnvat.gov.in என்னும் இணையதளம் செயல்படுகிறது. இந்த இணையதளத்தின் மூலம் வணிகர்களுக்கு தேவையான அனைத்து தகவல்களும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. இணையம் வழியாக மாதாந்திர படிவங்கள் தாக்கல் செய்யும் வசதியும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## 7. 2009–2010–ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட வரிச்சலுகைகள்

தொழில் மற்றும் வணிகப்பிரதிநிதிகளின், வரி தொடர்பான கோரிக்கைகள் மற்றும் வரி நிர்வாகம் குறித்த முறையீடுகள் மற்றும் குறைகளை அறிந்து கொண்டு செயல்பட நிதிநிலை அறிக்கைக்கு முன்பாக தொழில் மற்றும் வணிகப் பிரதிநிதிகளின் கூட்டத்தை நடத்துவதை வழக்கமாக கொண்டு வரும் இந்த அரசு 4.2.2009 அன்று அக்கூட்டத்தை நடத்தியது. அதில் பல்வேறு வணிக சங்கங்கள் மற்றும் தொழில் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை முன்வைத்தனர். அவர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் நுகர்வோர், வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்குப் பயன்தரும் வகையில் நிதிநிலை அறிக்கையில் மதிப்புக் கூட்டு வரி தொடர்பாக பல்வேறு வரிச்சலுகைகள் அறிவிக்கப்பட்டன. இந்த அரசு நான்காவது முறையாக வரியில்லா நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கீழ்க்கண்ட பொருட்களுக்கு மதிப்புக் கூட்டு வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது:-

அ) மிளகு மற்றும் சீரகம் (விற்பனை தொகை வரம்பிற்கு உட்பட்டு)

ஆ) மாவு போன்ற பொருட்களை தயாரிப்பதற்கு பயன்படுத்தும் பருப்பு, பயிறு, பட்டாணி மற்றும் பட்டாணி பருப்பு ஆகியவற்றின் மீதான கொள்முதல் வரிக்கு 1.1.2007 முதல் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இ) சலவை நீர் (Bleach Liquid)

ஈ) கையினால் தயாரிக்கப்பட்ட இரும்பு பெட்டி (trunk box)

உ) கையினால் தயாரிக்கப்படும் தகர டின்கள்

அதேபோல் சாதாரண மக்கள் பயன்படுத்தும் கீழ்க்கண்ட பொருட்களுக்கு வரி 12.5 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக குறைக்கப்– பட்டுள்ளது:-

- வணிகச் சின்னமிடப்பட்ட நெய்
- வணிகச் சின்னமிடப்பட்ட ஊறுகாய்
- கையினால் தயாரிக்கப்பட்ட இரும்பு பெட்டகம் (Iron safe)
- உலர்ந்த திராட்சை
- குண்டூசி, ஊக்கு, ஜெம்கிளிப்புகள், அடையாள அட்டை கிளிப்புகள், தேர்வு அட்டை கிளிப்புகள், ரப்பர் பேண்ட், ஸ்டேப்ளர் பின்.
- தகவல் தொழில் நுட்ப பொருளான ஐ–பாட் (i-pod), MP3 மற்றும் MP4 பிளேயர்கள்

சேலம் சேகோ செர்வ் (Sago Serve) மூலம் விற்கப்படும் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் மீதான வரி 2 சதவிகிதத்திலிருந்து 1 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து வரிச் சலுகைகளும் (மேலே (ஆ)–வைத் தவிர) 01.04.2009 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- செங்கல் தயாரிப்பாளர்கள் எளிய முறையில் வரி செலுத்துவதற்காக, அவர்களின் விருப்பத்தின்பேரில் அவர்கள் அமைத்திருக்கும் செங்கல் சூளை அடுப்புகளின் எண்ணிக்கை– யின் அடிப்படையில் வரி விதிக்கப்படும்.
- 1.1.2007 முதல் 31.3.2007 முடிய உள்ள காலத்திற்கு ரூபாய் 5 இலட்சத்திற்கு குறைவான விற்றுமுதல் தொகை கொண்ட உற்பத்தியாளர்கள் மற்றும் ரூபாய் 10 இலட்சம் தொகைக்குக் குறைவான விற்றுமுதல் தொகை கொண்ட வணிகர்கள், மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் கீழான சலுகைகளைத் தங்களுக்கும் அளிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர்.இக்கோரிக்கையினை ஏற்று 1.4.2006 முதல் 31.12.2006 வரையிலான காலத்திற்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழான விற்பனைத் தொகையினையும் சேர்த்து கணக்கிட்டு அதனை மதிப்பு கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் ஆண்டு மொத்த விற்பனைத் தொகையாகக் கருதி மதிப்புக் கூட்டு வரி விதிப்பு செய்யப்படும். இது மேற்குறிப்பிட்ட

காலத்தில் மதிப்புக் கூட்டு வரி வசூல் செய்த வணிகர்களுக்கு மட்டும் பொருந்தும்.

## 8. மதிப்புக் கூட்டு வரி அமலாக்கத்தினால் ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடு செய்தல்

மதிப்புக் கூட்டு வரி நடைமுறைப்படுத்தப்– படுவதால் ஏற்படும் வருவாய் இழப்பினை 2005–2006, 2006–2007 மற்றும் 2007–2008 நிதியாண்டுகளில் முறையே 100 விழுக்காடு, 75 விழுக்காடு மற்றும் 50 விழுக்காடு என்ற வகையில் மத்திய அரசு ஈடு செய்யும் என்று ஜனவரி 2005–ல் அனைத்து மாநிலங்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. நமது மாநிலத்தில் மதிப்புக் கூட்டு வரி 1.1.2007 முதல், அதாவது இரண்டாம் நிதியாண்டான 2006–2007–ல் நடைமுறைப்படுத்தப்பட்டதால் நமது மாநிலம் ஜனவரி 2007 முதல் மார்ச் 2007 வரையில் 75 விழுக்காடு அளவிற்கும் மூன்றாம் ஆண்டான 2007–2008 ஆண்டிற்கு 50 விழுக்காடு அளவிற்கும் ஈட்டுத்தொகை பெற தகுதி பெற்றுள்ளது. ஆனால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் 2007, 2008 மற்றும் 2009 ஆகிய ஆங்கில ஆண்டுகளுக்கு முறையே 100 விழுக்காடு, 75 விழுக்காடு மற்றும் 50 விழுக்காடு என்ற வகையில் இழப்பீடு வழங்க மாண்புமிகு பிரதமர் மற்றும் மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை அனுப்பினார். அதன் அடிப்படையில் மத்திய அரசு, ஆங்கில ஆண்டு 2007 மற்றும் 2008–க்கு முறையே 75 விழுக்காடு மற்றும் 50 விழுக்காடு அளவிற்கு ஈட்டுத் தொகை வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளது. இதன் அடிப்படையில் ஜனவரி 2007 முதல் டிசம்பர் 2008 வரையிலான காலஅளவிற்கு ரூ.5,024.74 கோடி அளவிற்கு இழப்பீட்டுத் தொகை கேட்கப்பட்டு மத்திய அரசு தற்காலிகமாக இதுவரை ரூபாய் 3040 கோடி வழங்கியுள்ளது. மத்திய அரசிடம் இருந்து மீதம் உள்ள இழப்பீட்டுத் தொகை பெறவேண்டியுள்ளது.

## 9. மத்திய விற்பனை வரியை படிப்படியாக நீக்குதல்

உற்பத்தித் துறையில் தமிழகம் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. இந்திய அரசு படிப்படியாக மத்திய விற்பனை வரியை நீக்குவது என்று முடிவெடுத்துள்ளது. அதன்படி 1.4.2007 முதல் மத்திய விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடாகவும் 1.6.2008 முதல் 3 விழுக்காட்டில் இருந்து 2 விழுக்காடாகவும் குறைக்கப்பட்டது. மத்திய விற்பனை வரிக் குறைப்பினால் ஏற்படும் வரி இழப்பினை ஈடு செய்ய மத்திய அரசு இழப்பீட்டுத் தொகை வழங்கும் என்றும், மாநில அரசுகள் புகையிலைப் பொருட்கள் மீது மதிப்புக் கூட்டு வரி விதிக்க தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்றும் மத்திய அரசு அறிவித்தது. அதன்படி நமது அரசு புகையிலைப் பொருட்கள் மீது மதிப்புக் கூட்டு வரி விதிக்க சட்டதிருத்தம் கொண்டு வந்து வரி விதிக்கப்பட்டு வருகிறது. ஏப்ரல் 2007 முதல் மார்ச் 2008 வரையிலான கால அளவிற்கு இழப்பீட்டுத் தொகை ரூ 863.33 கோடி கேட்கப்பட்டு மத்திய அரசு தற்காலிகமாக ரூ 647.54 கோடி வழங்கியுள்ளது. ஏப்ரல் 2008 முதல் மார்ச் 2009 வரையிலான காலஅளவிற்கு ரூ.1854.72 கோடி இழப்பீட்டுத் தொகை கேட்கப்பட்டுள்ளது.

## 10. துறையின் அமைப்பும் செயல்பாடுகளும்

வணிகவரித்துறையின் நிர்வாகம், ஆணையர் அவர்களால் நடத்தப்படுகிறது. ஆணையருக்கு உதவியாக தலைமையகத்தில் 5 கூடுதல் ஆணையர்களும், 3 இணை

ஆணையர்களும், 1 இணை இயக்குநரும் (புள்ளியியல் & ஆராய்ச்சி), 4 துணை ஆணையர்களும் மற்றும் 6 நிர்வாக அலுவலர்களும் உள்ளனர்.

அலுவலர்கள் சங்கத்தின் கோரிக்கையினை ஏற்று இத்துறையிலுள்ள துணை வணிகவரி அலுவலர் முதல் இணை ஆணையர் வரை உள்ள பதவிகள், வணிகவரி அலுவலர், உதவி ஆணையர், துணை ஆணையர், இணை ஆணையர் மற்றும் கூடுதல் ஆணையர் என 30.7.2008 முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஆற்றுகின்ற பணியின் அடிப்படையில் வணிகவரித்துறை பல்வேறு பிரிவுகளாக செயல்பட்டு வருகிறது.

## 10.1 வரிவிதிப்புப் பிரிவு

உதவி ஆணையர், வணிகவரி அலுவலர், மற்றும் உதவி வணிகவரி அலுவலர் ஆகியோர் வரிவிதிப்பு அலுவலர்களாக உள்ளனர். மாநிலத்தில் மொத்தம் 323 வரிவிதிப்பு வட்டங்கள் உள்ளன. அவற்றில் 236 வட்டங்களுக்கு உதவி ஆணையர் தலைமை அலுவலராகவும், 81 வட்டங்களுக்கு வணிகவரி அலுவலர் தலைமை அலுவலராகவும் உள்ளனர். இவை தவிர சென்னையில் நான்கும் கோவையில் இரண்டும் ஆக ஆறு விரைவு வழி வரிவிதிப்பு வட்டங்கள் துணை ஆணையர்களைத் தலைமை அலுவலராகக் கொண்டு இயங்குகின்றன. வரிவிதிப்பு அலுவலர்களின் பணி, மாவட்ட அளவில் துணை ஆணையராலும், கோட்ட அளவில் இணை ஆணையராலும் கண்காணிக்கப்படுகிறது. அனைத்து வரி விதிப்பு அலுவலகங்கள் மற்றும் துணை ஆணையர் அலுவலகங்களுக்கு மேம்படுத்தப்பட்ட அறைகலன்கள் (Modular furniture) வழங்கி அலுவலகங்கள் நவீன மயமாக்கப்பட்டுள்ளன.

## 10.2 தணிக்கைப் பிரிவு

ஒவ்வொரு வணிகவரி மாவட்டத்திலும், ஒரு உள்ளீட்டுத் தணிக்கைக் குழு உள்ளது. உதவி ஆணையர் ஒருவர் மற்றும் வணிகவரி அலுவலர் ஒருவர் கொண்ட இக்குழு துணை ஆணையரின் கீழ் செயல்படுகிறது. இந்தக் குழுவிற்கான தணிக்கை நிகழ்ச்சி நிரல் துணை ஆணையரால் வகுத்து கண்காணிக்கப்படுகிறது. ஒவ்வொரு காலாண்டிற்கும், வரிவிதிப்பு ஆணைகள், வருவாய் வரவுகள், திருப்பியளித்த இனங்கள் ஆகியவற்றில் உள்ள குறைகளை இக்குழு வரிவிதிப்பு வட்ட வாரியாக அறிக்கை தயாரிக்கிறது. அவற்றின் மீதான குறை நிவர்த்திப் பணிகளை தொடர்புடைய வரிவிதிப்புப் பிரிவு துணை ஆணையர் மற்றும் இணை ஆணையர் கண்காணிக்கின்றனர்.

இது தவிர, மாநிலக் கணக்காயர், ஆண்டுக்கு ஒருமுறை தனது தணிக்கைக் குழுவினை ஒவ்வொரு வரிவிதிப்பு வட்ட அலுவலகத்திற்கும் அனுப்பி வரிவிதிப்பு கோப்புகள் மற்றும் வரி திரும்ப அளித்தல் தொடர்பான தணிக்கைக் குறிப்பினை தயாரித்து அனுப்புகிறார். அதன் மீது குறைநிவர்த்தி செய்ய வேண்டிய முக்கிய பணி வரிவிதிப்பு அலுவலர்களிடம் உள்ளது. மாநிலக் கணக்காயர் தணிக்கைக் குறிப்பின் மீதான குறை நிவர்த்தி என்னும் முக்கிய பணியினை கோட்ட அளவில் இணை ஆணையர்கள், மாநில அளவில் ஆணையர் அலுவலகத்தில் உள்ள கூடுதல் ஆணையர் (தணிக்கை) கண்காணிக்கின்றனர்.

## 10.3 மேல்முறையீட்டுப் பிரிவு

முதல் மேல்முறையீடு, மேல்முறையீட்டுத் துணை ஆணையரிடம் தாக்கல் செய்யப்படுகிறது. இத்துறையில் இருபது மேல்முறையீட்டுத் துணை ஆணையர்களும், இரண்டு மேல்முறையீட்டு இணை ஆணையர்களும் உள்ளனர். ஒவ்வொரு மேல்முறையீட்டு அலுவலர் முன்பும் துறை சார்பாக வாதிடுவதற்கு, உதவி ஆணையர் நிலையில் ஒரு துறைப் பிரதிநிதி நியமிக்கப்பட்டுள்ளார். விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் இரண்டாவது மேல்முறையீடு செய்யப்படுகிறது. சென்னையில் முதன்மை தீர்ப்பாயமும், சென்னை, கோவை, மதுரையில் கூடுதல் தீர்ப்பாயங்களும் உள்ளன. துறை சார்பாக வாதிடுவதற்கு முதன்மை தீர்ப்பாயத்தில் இணை ஆணையர் நிலையில் மாநில பிரதிநிதியும், கூடுதல் தீர்ப்பாயங்களில் துணை ஆணையர் நிலையில் கூடுதல் மாநில பிரதிநிதியும் உள்ளனர்.

## 10.4 செயலாக்கப் பிரிவு

செயலாக்கப் பிரிவு ஏழு இணை ஆணையர்களின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. இது தவிர, ஒரு இணை ஆணையர் தலைமையில் இடை மாநில புலனாய்வுக் குழு ஒன்று செயல்படுகிறது.

துறையின் செயலாக்கப் பிரிவில், பத்து துணை ஆணையர்களும், பதினான்கு உதவி ஆணையர்களும் உள்ளனர். துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையரின் கீழ் வணிகவரி அலுவலர் மற்றும் உதவி வணிகவரி அலுவலர் அடங்கிய குழு அலுவலர்கள் உள்ளனர். இவை தவிர சுற்றும் படை, இரயில் சரக்கு போக்குவரத்து நிலையங்கள் மற்றும் சரக்குப்பிரிவுகளிலும் அலுவலர்கள் பணிபுரிகின்றனர்.

வரி ஏய்ப்பினை கண்டு பிடிக்கும் பொருட்டு செயலாக்கப் பிரிவு அலுவலர்கள் கடைத் தணிக்கை பணியில் ஈடுபடுகின்றனர். மேலும், வணிகவரி ஆணையரின் அனுமதியின்பேரில் செயலாக்க பிரிவு அலுவலர்கள் மதிப்புக்கூட்டு வரி சட்டத்தின் கீழ் கணக்குகளை ஆய்வு செய்ய வணிகர்களுக்கு அறிவிப்பு கொடுத்தபின் வணிக தளங்களில் கணக்குகளைத் தணிக்கை செய்கின்றனர். சுற்றும் படை, இரயிலக மற்றும் சரக்குப் பிரிவுகளில் பணிபுரியும் அலுவலர்கள் வாகனத் தணிக்கையின் மூலம் பெறப்படும் கொள்முதல் பில்கள் மற்றும் இதர ஆவணங்கள் ஆகியவற்றை வணிகர்களின் கணக்குப் புத்தகங்களுடன் சரிபார்ப்பதன் மூலம் வரி ஏய்ப்பினைத் தடுக்கின்றனர். இடைமாநில புலனாய்வுக்குழு அலுவலர்கள் பிற மாநிலங்களில் இருந்து பெறப்பட்ட வடிப்பு நகல்களை இம்மாநில வணிகர்களிடம் சரிபார்ப்பதன் மூலம் வரி ஏய்ப்பினைக் கண்டுபிடித்து வருகின்றனர்.

## 10.5 தணிக்கைச் சாவடிகள்

மாநில எல்லையில், இருபத்தெட்டு தணிக்கைச் சாவடிகளும், மாநிலத்திற்குள் ஒரு உள் தணிக்கைச் சாவடியும் உள்ளன. மாநில எல்லைத் தணிக்கைச் சாவடிகளில் பதினைந்தும், உள் தணிக்கைச் சாவடியும் பெரிய தணிக்கைச் சாவடிகளாகும் (Major Checkposts). மற்ற பதின்மூன்று தணிக்கைச் சாவடிகளும் சிறிய தணிக்கைச் சாவடிகளாகும் (Minor Checkposts). ஐந்து பெரிய எல்லைத் தணிக்கைச் சாவடிகளில் உதவி ஆணையர்கள் தலைமை அலுவலர்களாக உள்ளனர். உதவி வணிகவரி அலுவலர்கள்

சோதனைச் சாவடி அலுவலர்களாகவும், உடன் பணிபுரிய உயர் பிரிவு ஆய்வாளர்கள், பதிவுரு எழுத்தர்கள், அலுவலக உதவியாளர்கள், பளுதூக்கிகள் ஆகியோர் உள்ளனர். தணிக்கைச் சாவடிகளுக்கு ரூ.87 லட்சம் செலவில் ஆவணங்கள் சமர்ப்பிப்பதற்கான மேசை, அறைகலன்கள், பெயர் பலகைகள் ஆகியவற்றை அளித்து, பிற கட்டட மற்றும் மின் பராமரிப்பு வேலைகள் செய்து நவீன மயமாக்கப்பட்டுள்ளன. வாகன இயக்கம் மற்றும் சேகரிக்கப்பட்ட ஆவணங்கள் குறித்த விவரங்கள் ஆகியவற்றை பதிவு செய்வதற்காக தணிக்கைச் சாவடிகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 11. வணிகவரி பணியாளர் பயிற்சி மையம்

வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையம் 1982ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. வணிகவரித் துறையில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வணிகவரி தொடர்புடைய சட்டங்கள் மற்றும் விதிகள் குறித்து பயிற்றுவிக்கப்படுவது இப்பயிற்சி நிலையத்தின் நோக்கம் ஆகும். மேலும் வணிகவரித்துறை கணினி மயமாக்கப்பட்டதனைத் தொடர்ந்து அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு கணினியை உரிய முறையில் பயன்படுத்த பயிற்சி அளிக்கப்படுகிறது. சிறப்பு விரிவுரையாளர்களைக் கொண்டு பல்வேறு தலைப்புகளில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சி மையம் இணை ஆணையர் ஒருவரை இயக்குநராகக் கொண்டு இயங்குகிறது. பயிற்சி மையத்தில் பயிற்சிகள் அனைத்தும், துணை ஆணையர் பணி நிலையில் உள்ள இரு முதுநிலை விரிவுரையாளர்கள் உதவி ஆணையர் நிலையில் ஒரு விரிவுரையாளர் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சி மையத்தில் துறை அலுவலர்களுக்கு கீழ்க்கண்ட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன :

- வரிவிதிப்புக் கோட்பாட்டின் அடிப்படைப் பயிற்சி
- பணியிடைப் பயிற்சி
- கணினிப் பயிற்சி
- மதிப்புக் கூட்டு வரிப் பயிற்சி

1.1.2007 முதல் புதிய வரிவிதிப்பு முறையான மதிப்புக் கூட்டு வரி முறை நமது மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் இந்த பயிற்சி மையம் சென்னை கோட்டங்களில் உள்ள அனைத்து அமைச்சுப் பணியாளர்களுக்கும் மதிப்புக் கூட்டு வரி குறித்து பயிற்சி அளிக்கிறது.

இத்துறையின் மற்ற கோட்டங்களில் உள்ள அமைச்சுப் பணியாளர்களுக்கு அந்தந்த கோட்ட அலுவலகங்களில் அந்தந்த இணை ஆணையரின் மேற்பார்வையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், இந்த பயிற்சி மையம் அமைச்சுப் பணியாளர்களுக்கு துறை தொடர்பான கணினி பயிற்சி, உள் இணையம், இணையம் மற்றும் மின் அஞ்சல் தொடர்பான பயிற்சியும் வழங்கி வருகிறது.

2008–2009ம் ஆண்டில் அலுவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கும் கீழ்க்கண்ட புத்தாக்கப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன:-

- துறை தொடர்பான கணினி பயிற்சி
- அடிப்படைக் கணினிப் பயிற்சி
- மதிப்புக்கூட்டு வரி புத்தாக்கப் பயிற்சி
  (VAT Refresher Training)
- பணியிடைப் பயிற்சி

வணிகவரித்துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் மற்றும் அதன் விதிகள் மீது அமைச்சுப் பணியாளர் நிலை முதல் மாநில அரசு பணி நிலையில் உள்ள அலுவலர்கள் வரை உள்ள அனைத்து பிரிவினருக்கும் புத்தாக்க பயிற்சி மற்றும் பணியிடை பயிற்சி அளிப்பதே இந்த பயிற்சி மையத்தின் நோக்கமாகும். மேலும், அடிப்படை கணினி பயிற்சி மற்றும் துறையின் தற்போதைய மென்பொருள் தொடர்பான பயிற்சி ஆகியவற்றை அனைத்து பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு இப்பயிற்சி மையம் வழங்கி வருகிறது. சென்னையில் மட்டுமல்லாது மற்ற கோட்ட தலைமையிடமான வேலூர், சேலம், கோவை, திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலும் இணை ஆணையர்கள் மேற்பார்வையில் அந்தந்த நிர்வாக துணை ஆணையர்களின் தலைமையில் இப்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

சென்னையிலும் மற்ற மாவட்ட தலைமை அலுவலகங்களிலும் இணை ஆணையர்கள் முதல் அலுவலக உதவியாளர்கள் வரையில் உள்ள அனைத்து பணியாளர்கள் மற்றும் அலுவலர்– களுக்கும் எல்காட் பயிற்சி மையத்தின் மூலமாக Linux Operating System-ல் கணினி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், வரிவிவர பரிமாற்ற முறை (TINXSYS - Tax Information Exchange System) மற்றும் கணினி மூலமாக மாதாந்திர படிவங்களை ஆய்வு செய்தல் தொடர்பாக அனைத்து அலுவலர்கள் மற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் சென்னை மற்றும் கோட்ட தலைமை இடங்களான வேலூர், சேலம், கோவை, திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 12. புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு புள்ளியியல் இணை இயக்குநர் தலைமையில் துறை தலைமையிடத்தில் இயங்கி வருகிறது. ஒவ்வொரு கோட்டத்திலும் ஒரு இளநிலை ஆராய்ச்சி அலுவலரும் ஒவ்வொரு வணிகவரி மாவட்டத்திலும் ஒரு புள்ளியியல் ஆய்வாளரும் பணிபுரிந்து வருகின்றனர்.

‘வணிகவரித் துறை – ஒரு கண்ணோட்டம்’ மற்றும் ‘வணிகவரித் துறை – முக்கிய குறியீடுகள் (மடிப்புத் தாள்)’ ஆகிய இரு வருடாந்திர வெளியீடுகள் புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் வெளியிடப்பட்டு வருகின்றன. இப்பிரிவு கீழ்க்கண்ட அறிக்கைகளை தயாரித்து வருகிறது.

1. அனைத்துக் கோட்டங்கள் மற்றும் மாநிலத்துக்கான 100 பெரு வணிகர்களின் வருவாய் பற்றிய விவரங்களைப் பகுப்பாய்வு செய்தல்;

2. அனைத்துக் கோட்டங்கள் மற்றும் மாநிலத்துக்கான அதிக வருவாய் ஈட்டும் பொருட்கள் குறித்து பகுப்பாய்வு செய்தல்;

3. சட்ட வாரியாக மற்றும் கோட்ட வாரியாக வருவாயைத் தொகுத்தல்;

4. காலத்தொடர் பகுப்பாய்வு அறிக்கை – புள்ளி விவரத் தொகுப்பு;

5. வரி ஏய்ப்பினை மதிப்பீடு செய்ய பொருள் வாரியான பகுப்பாய்வுகளை நடத்துதல்

6. வரி ஏய்ப்பு அதிகம் காணப்படும் பொருட்கள் குறித்து அறிக்கை தயாரித்தல்

மேலும், மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்தப்பட்ட பின் சுமார் 260 பொருட்களின் விலையில் ஏற்படும் மாற்றம் குறித்து ஆய்வு செய்து இப்பிரிவினால் விலை கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## 13 வணிகவரித்துறையை கணினி மயமாக்குதல்

வணிகவரித் துறையில் கணினி செயல்பாடு 1973–ஆம் ஆண்டு அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தின் துணையோடு தொடங்கப்பட்டது. இத்துறை தன்னுடைய தகவல் விவர மையத்தை 1988–ஆம் ஆண்டு முதல் தொடங்கி மாதாந்திரப் படிவங்களை கணினியில் பதிவு செய்து நிதி நிலை அறிக்கை தயாரிப்பதற்கான விவரங்களை ஆய்வு செய்து அரசுக்கு வழங்குகிறது. மேலும், நிதி ஆதாரங்களைத் திறம்பட பெருக்குவதற்காக இத்துறையால் 1998–ஆம் ஆண்டு கள அலுவலகங்களுக்கு கணினிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு 2003–ஆம் ஆண்டு அனைத்து அலுவலகங்களுக்கும் அவர்களின் அலுவலகங்களிலேயே விவரங்களை பதிவு செய்ய கணினிகள் வழங்கப்பட்டன. அவ்வாறு பதியப்பட்ட விவரங்களை சென்னையில் உள்ள மைய கணினி மையத்திற்கு அனுப்புவதற்காக ஒரு அகண்ட தொடரமைப்பு (Wide Area Network) ஏற்படுத்தப்பட்டது. தற்போது இத்துறையில் வணிகப் பெருமக்களின் பயன்பாட்டிற்காக www.tnvat.gov.in என்ற இணையதளம் மற்றும் துறை பயன்பாட்டிற்காக உள் இணையம் ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 13.1 துறைக்கான உள் இணையம் (Intranet)

இந்த உள் இணையத்தில் அரசு மற்றும் ஆணையர் வழங்கிய கடிதங்கள், ஆணைகள், அறிவிக்கைகள் முதலியனவும் துறை அலுவலர்களுக்கு உதவும் விதமாய் அனைத்து பொருட்களுக்கான வரி விகிதங்கள் முக்கியமான தீர்ப்புகள் ஆகியனவும் உள்ளன. இந்த இணையத்தின் மூலமாக மின் அஞ்சல் செய்யவும் வசதி செய்யப்பட்டுள்ளது. அலுவலகங்களில் பதியப்பட்ட விவரங்களின் அடிப்படையில் இவ்விணையம் மூலமாக அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

### 13.2 வணிகவரித் துறையில் மின் ஆளுகை

வணிகவரித் துறையின் இணையதளம் மற்றும் துறை உள் இணையம் ஆகியவற்றின் மூலம் கீழ்க்கண்ட சேவைகள் மின் ஆளுமை திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன:-

### 13.2.1 வணிகர்கள் பதிவு

மதிப்புக் கூட்டு வரி மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டங்களின் கீழ் பதிவுச் சான்றிதழ் பெறுவதற்கான மென்பொருள் இத்துறையினால் உருவாக்கப்பட்டு அனைத்து வரிவிதிப்பு வட்டங்களிலும் கணினி மூலமாக பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. வரி செலுத்துவோர் எண்ணும் கணிப்பொறி வாயிலாகக் கொடுக்கப்படுகிறது. இணையம் மூலம் வணிகர்கள் புது வணிகத்திற்கான பதிவு விண்ணப்பங்களை பதிவு செய்யும் வசதியும் உள்ளது.

### 13.2.2 மாதாந்திரப் படிவங்களை சரிபார்த்தல்

மதிப்புக் கூட்டு வரி மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டங்களின் கீழ் மாதாந்திரப் படிவங்களை கணினியில் பதிவு செய்யும்பொருட்டு ஒரு மென்பொருள் இத்துறையினால் தயாரிக்கப்பட்டு அனைத்து வரிவிதிப்பு வட்டங்களிலும் செயல்படுகிறது. உதவி ஆணையர் முதல் ஆணையர் வரையிலான உயர்மட்ட அலுவலர்கள் மாதாந்திரப் படிவங்கள் பதிவு செய்த நிலையினை பார்த்து கண்காணிப்பதற்கு ஏதுவாக வரிவிதிப்பு வட்டங்களில் பெறப்படும் மாதாந்திரப் படிவங்கள் உடனுக்குடன் கணினியில் பதியப்பட்டு மத்திய சர்வர் கணினிக்கு மாற்றம் செய்யப்படுகிறது. அதே போல் கொள்முதல் மற்றும் விற்பனை பற்றிய விவரங்கள் கணினியில் பதியப்பெற்று குறுக்குத் தணிக்கை மூலம் உள்ளீட்டு வரி வரவு தொடர்பான கோரிக்கைகள் வரிவிதிப்பு அலுவலர்கள் மற்றும் உயர்மட்ட அலுவலர்களால் சரிபார்க்கப்பட்டு வருகிறது. மேலும், கையால் எழுதப்படும் காசோலைப் பதிவேடு முறை தவிர்க்கப்பட்டு வரி வசூல், காசோலைப் பதிவு அதன் தொடர்பான வங்கியில் செலுத்தும் படிவங்கள் தயாரிப்பது போன்ற செயல்பாடுகள் கணினி வாயிலாக நடைபெற்று வருகின்றன. மேலும், சுய வரிவிதிப்பு ஆணைகளை கணினி மூலம் வழங்கும் மென்பொருள் செயல் முறையில் உள்ளது.

### 13.2.3 மின்னணு இணைப்புகள்

LAN (Local Area Network) இணைப்பு அனைத்து வரிவிதிப்பு வட்டங்களிலும் செய்யப்பட்டுள்ளது. வணிகவரித் துறையில் அனைத்து அலுவலகங்களுக்கும் இணைய அகல் வழி (Internet Broad Band) இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அனைத்து அலுவலகங்– களுக்கும் ரூ.374.77 லட்சம் செலவில் TNSWAN இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

### 13.2.4 படிவங்கள் மின்னணு வழி அனுப்புகை

உள்ளீட்டு வரி வரவு கோரும் அனைத்து வணிகர்களும் மதிப்புக் கூட்டு வரி மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்ய வேண்டிய மாதாந்திரப் படிவங்களை www.tnvat.gov.in என்ற இணையதளம் மூலமாக நிகழ்நிலையில் தாக்கல் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, வணிகர்கள், மாதாந்திரப் படிவங்களை மின்னணு வழி அனுப்புகையின் (e-filing) மூலம் தாக்கல் செய்து வருகின்றனர்.

### 13.2.5 மின்னணுவழி பணம் செலுத்துதல்

www.tnvat.gov.in என்ற இணையதளம் வாயிலாக நிகழ்நிலையில் வரி பணம் செலுத்தும் வசதி விரைவில் செயல்படுத்தப்படும்.

### 13.2.6 அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட மின் ஆளுமைச் சேவைகள்

கீழ்க்கண்ட மின் ஆளுமைச் சேவைகள் இத்துறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன:

1. சோதனைச் சாவடிகளில் வாகனங்களை விரைவில் அனுப்பும் முறை
2. விற்பனைக்குரிய படிவங்களை கேட்பதற்கான வசதி
3. ஏற்றுமதியாளர்கள் வரி திருப்பிப் பெறுவதற்காக கேட்பு படிவத்தைத் தாக்கல் செய்யும் வசதி

### 13.2.7 பிற மின் ஆளுமைச் சேவைகள்

வணிகப் பெருமக்களுக்காக கீழ்க்கண்ட வசதிகள் / சேவைகள் www.tnvat.gov.in என்ற இணையதளத்தில் செய்து தரப்பட்டுள்ளன:-

- சட்டங்கள், விதிகள், படிவங்கள், சுற்றறிக்கைகள், தெளிவுரைகள், அரசு ஆணைகள் மற்றும் அறிவிக்கைகள் பிறப்பிக்கப்பட்ட உடனேயே அறியும் வசதி;
- வணிகரின் வரிவிதிப்பு, செலுத்திய வரி போன்ற விபரங்களை அறிய பேரேடு வசதி;
- பொருட்களின் அட்டவணை மற்றும் வரிவிகிதம் தெரிந்து கொள்ளும் வசதி;
- வரி செலுத்துவோர் அடையாள எண் அல்லது பெயர் மூலம் வணிகர்களின் முழு விவரங்களைத் தெரிந்து கொள்ளும் வசதி;
- வரிவிதிப்பு வட்டத்தில் வரித்திருப்புகை அளித்த விவரத்தினைப் பார்வையிடும் வசதி;
- வரிவிதிப்பு வட்டத்தில் விற்பனைப் படிவங்களின் இருப்பு நிலையினை அறியும் வசதி;
- படிவம் -W (ஏற்றுமதி – வரித்திருப்புகை) படிவத்தை பதிவு செய்வதற்கான வசதியும், அதன்மீது வரிவிதிப்பு வட்டம் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கான வசதியும்.

### 13.2.8 கூடுதல் கணினிகள் வழங்குதல்

துறையின் எல்லா அலுவலர்களுக்கும் தற்பொழுதுள்ள நான்கு கணினிகளுடன் கூடுதலாக மூன்று கணினிகளும், பல் வகைப் பயன்பாட்டுக் கருவி (Multi Function Device) ஒன்றும் வழங்கப்பட்டு வருகின்றன.

### 13.2.9 வரித் தகவல் பரிமாற்ற முறை (TINXSYS)

TINXSYS என்பது அனைத்து மாநில வணிகவரித் துறைகளும் தங்களுக்குள் தகவல் பரிமாற்றம் செய்து கொள்ள மாநில நிதி அமைச்சர்களைக் கொண்ட அதிகாரமளிக்கப்பட்டக் குழுவினால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட முறையாகும். இதனால் அனைத்து மாநில வணிகவரித் துறைகளும் தங்களுக்குள் தகவல் பரிமாற்றம் செய்து கொள்ள இயலும். இத்திட்டம், சலுகை வரி அடிப்படையில் மாநிலங்களுக்கிடையே விற்கப்படும் பொருட்களின் விவரங்களைச் சிறந்த முறையில் கண்காணிக்கப் பயன்படுகிறது. மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட படிவங்கள் மற்றும் வணிகர்களின் விவரங்கள் குறித்து வணிகப் பெருமக்கள் மற்றும் வணிகவரித் துறை அலுவலர்கள் சரி பார்க்கவும் இத்திட்டத்தினைப் பயன்படுத்தலாம். தொடர்புடைய அனைத்து அலுவலர்களுக்கும் இத்திட்டத்தினைப் பயன்படுத்துவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அலுவலகத்திற்கும் பயன்படுத்துபவர் பெயர் மற்றும் கடவுச் சொல் வழங்கப்பட்டுள்ளன. மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது நமது மாநிலத்தில் இத்திட்டத்தின் கீழ் அதிக அளவில் விவரங்கள் தொகுக்கப்பட்டு பதியப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மற்ற மாநிலங்களைப் போல் அல்லாமல் வெளி நிறுவனங்களின் உதவி இல்லாமல் நமது துறையிலேயே அரசுக்கு கூடுதல் செலவில்லாமல் தகவல் அனுப்பும் மென்பொருள் உருவாக்கி செயல்படுத்தப்பட்டுள்ளது.

TINXSYS இணையதளங்கள் கீழே குறிப்பிடப்– பட்டுள்ளன.

1. http://www.statevat.gov.in
2. http://www.tinxsys.com
3. http://www.vinxsys.com

மேலும், வணிகர் குறித்த விவரங்களை வரி செலுத்துவோர் அடையாள எண் (TIN) வழியாக "தகவல் பரிமாற்றக் குரல் பதிவு செய்யும் கருவி" (Interactive Voice Response system) மூலமாக அறிந்து கொள்ளலாம். இதற்கான கட்டணமற்ற தொலைபேசி எண் 1800 2200 17.

## 14. வரி கைவிடுதல் ஆய்வுக்குழு

அரசாணை எண். (டி) 428, வணிகவரி மற்றும் பதிவுத் (டி2) துறை, நாள் 25.8.2006–ன் படி கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட வரி கைவிடுதல் ஆய்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

1. அரசுச் செயலர், நிதித்துறை
2. அரசுச் செயலர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை

3. வணிகவரி ஆணையர்

நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் தெளிவுரைகளால் வணிகர்கள் கொள்முதல் செய்வோர்களிடமிருந்து வரி வசூல் செய்யாத நிகழ்வுகளில் பல்லாண்டுகளாக நிலுவையில் உள்ள வரி கைவிடுதல் கருத்துருக்களை ஆய்வு செய்து முடிவெடுப்பதற்காக இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு 15.11.2006, 13.8.2007 மற்றும் 17.11.2008 ஆகிய நாட்களில் கூடி வரி கைவிடுதல் முன்மொழிவுகளைப் பரிசீலனை செய்தது.

17.11.2008–ல் நடைபெற்ற இக்குழுவின் மூன்றாவது கூட்டத்தில் 23 வரி கைவிடுதல் கருத்துருக்கள் பரிசீலிக்கப்பட்டன. 3 இனங்கள் நிராகரிக்கப்பட்டன. வரி கைவிடுதல் ஆய்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 20 இனங்களில் ரூ.92,91,25,384/– வரித்– தொகையினை கைவிடுதலுக்கான பரிந்துரை அரசால் பரிசீலிக்கப்பட்டு ஆணைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## 15. நிலுவைகளைத் தள்ளுபடி செய்தல்

1990–1991ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்திற்கான வரி நிலுவைத் தொகையாக மொத்தம் ரூ.98.71 கோடி வசூலிக்க வேண்டியிருந்தது. இதில் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1959–ன் கீழ் ரூ.31.29 கோடியும் மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டம் 1956–ன் கீழ் ரூ.6.42 கோடியும் ஆக மொத்தம் ரூ.37.71 கோடி தண்டத்தொகை அடங்கும். பல்லாண்டுகளாக துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டும் இந்நிலுவைத் தொகைகளை வணிகர்களிடமிருந்து வசூலிக்க இயலவில்லை. மேலும், மூடப்பட்ட வணிக நிறுவனங்களிடமிருந்து வரி நிலுவைகளை வசூலிக்க சாத்தியக் கூறுகள் இல்லை. மேற்கண்ட சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு அரசாணை எண் 88, வணிகவரி மற்றும் பதிவு(டி1)த்துறை நாள் 10.10.2008–ல் 1990–1991–ஆம் ஆண்டுவரை உள்ள காலத்திற்கான தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1959–ன் கீழ் வசூலிக்க இயலாத நிலுவை வரி, உபரிவரி, கூடுதல் வரி மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம் 1956–ன்கீழ் வசூலிக்க இயலாத நிலுவை வரி, மேலும் இவை தொடர்புடைய வசூலிக்க இயலாத நிலுவைத் தண்டத்தொகை மற்றும் வட்டி ஆகியவற்றினை தள்ளுபடி செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. இத்தள்ளுபடி திட்டம் நீதிமன்றத்தில் வரிவிதிப்பு மற்றும் வரி வசூல் மீதான வழக்குகள் நிலுவையில் இல்லா இனங்கள் அசையா சொத்துக்கள் இல்லாத இனங்கள் மற்றும் 1.4.2002–க்கு முன் வணிகம் நிறுத்தப்பட்ட இனங்கள் ஆகியவற்றுக்குப் பொருந்தும். மேலும், வரி நிலுவைகளைத் தள்ளுபடி செய்வதற்கான அதிகாரம் மண்டல வணிகவரி உதவி ஆணையர்களுக்கு (தற்போது துணை ஆணையர்) வழங்கப்பட்டுள்ளது.

## 6 ஒரே முறை தீர்வுத் திட்டம்

31.03.2001 வரை கேட்பு எழுப்பப்பட்டு நிலுவையிலிருந்த வரி, அபராதம், வட்டி ஆகியவற்றின் வசூலை விரைவுபடுத்தும் பொருட்டு 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைத் தொகைகளைக் கொடுத்துத் தீர்த்தல்) சட்டம் மூலம் சமாதானத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும் அரசுக்குச் சேர வேண்டிய கணிசமான அளவு தொகை நீண்டகாலமாக வசூலிக்கப்படாமலிருந்தது. இந்நிலையைக் கருத்திற் கொண்டும், வணிகர்களின் துன்பத்தைக் குறைக்கும் பொருட்டும் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரி, அபராதம் மற்றும் வட்டி நிலுவைகளைக் கொடுத்துத் தீர்க்க வணிகர்களுக்கு

ஒரு வாய்ப்பளிக்கக் கருதப்பட்டது. அதன்படி, 31.3.2002 வரை கேட்பு அறிவிப்பு அனுப்பியதால் உள்ள நிலுவைத் தொகைகளை கொடுத்துத் தீர்ப்பதற்கு மேலும் எளிமையான ஒரே முறை தீர்வுத் திட்டம் ஒன்றை அரசு அவசரச் சட்டம் எண் 7/2008 மூலம் நடைமுறைப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு:-

1. இத்திட்டம் தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் 1.4.2002–க்கு முன்பு கோரப்பட்ட கேட்புத் தொகை–களுக்குப் பொருந்தும்.

2. கிடைத்த ஆவணங்களின் அடிப்–படையில் சிறந்த தீர்ப்பாக வரிவிதிப்பு செய்யப்பட்ட நேர்வுகளில் இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்கும் நபர் வரி நிலுவையில் மூன்றில் ஒரு பங்கு வரியினை ஆண்டிற்கு 6 விழுக்காடு வட்டியுடன் செலுத்தினால் போதுமானது.

3. மாதாந்திரப் படிவங்களின் வாயிலாக வணிகர் அறிவித்த வரியைவிட கேட்புத்தொகையில் கோரப்பட்ட வரி அதிகமாக இருக்கும்பொழுது விண்ணப்பிப்பவர் மாதாந்திரப் படிவங்– களின் வாயிலாக அறிவித்த மொத்த வரியையும் அதற்கு மிகுதியாக கோரப்பட்டுள்ள கேட்புத் தொகையில் மூன்றில் ஒரு பங்கையும் ஆண்டிற்கு 6 விழுக்காடு வட்டியுடன் செலுத்தினால் போதுமானது.

4. மாதாந்திரப் படிவங்களின்படி வணிகர் அறிவித்த வரியினை ஏற்றுக் கொண்டு எடுக்கப்பட்ட கேட்புத் தொகையில் நிலுவையில் உள்ள வரி அனைத்தையும் ஆண்டிற்கு 6 விழுக்காடு வட்டியுடன் செலுத்தினால் போதுமானது.

மேற்கண்ட நேர்வுகளில் வரி, வட்டி ஆகியவற்றில் மீதம் உள்ள நிலுவைத் தொகையும் மற்றும் மொத்த தண்டத்தொகையும் தள்ளுபடி செய்யப்படும்.

5. கேட்புத்தொகை 1.4.2002 முன் எழுப்பப்பட்டு வரித்தொகை எதுவும் நிலுவையில் இல்லாமல் வட்டி அல்லது தண்டத் தொகை அல்லது இரண்டும் நிலுவையாக இருக்கும் நேர்வுகளில் விண்ணப்பிப்பவர் தண்டத் தொகையில் 10 விழுக்காடும், வட்டியில் 25 விழுக்காடும் செலுத்த வேண்டும். மீதம் உள்ள 90 விழுக்காடு தண்டத் தொகை மற்றும் 75 விழுக்காடு வட்டியும் தள்ளுபடி செய்யப்படும்.

6. இத்திட்டம் கீழ்க்காணும் இனங்–களுக்குப் பொருந்தும்:-

அ) நீதிமன்றங்களில் மேல் முறையீடுகள் நிலுவையில் இல்லாத நேர்வுகள்;

ஆ) நிறுத்தப்பட்ட அல்லது நடைபெறுகின்ற அனைத்து வணிகங்கள்;

இ) வரி நிலுவைகளை வசூலிக்கும் பொருட்டு சொத்துக்கள் கையகப்–படுத்தப்பட்ட இனங்கள்;

ஈ) வரித்தள்ளி வைப்பு விதிகள் மீறப்பட்ட இனங்கள் (Deferral violation cases).

இத்திட்டம் தொடக்கத்தில் 1.11.2008 முதல் 31.1.2009 வரை மூன்று மாதங்கள் நடைமுறையில் இருந்தது. பின்னர், பல வணிகச் சங்கங்களின் வேண்டுகோள்களை ஏற்று இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பம் செய்ய கால அவகாசம் 31.3.2009 வரை நீட்டிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 31.3.2009 வரை 9673 விண்ணப்பங்கள் பெறப்பட்டு ரூ.72.94 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

## 17. வணிகர் நல வாரியம்

சட்டப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பினைத் தொடர்ந்து தமிழ் நாட்டிலுள்ள அனைத்து வணிக பெருமக்களுக்கும் பயன் தரும் வகையில் ‘‘தமிழ் நாடு வணிகர் நல வாரியம்‘‘ 1989 –ஆம் ஆண்டில் அமைக்கப்பெற்று இயங்கி வருகிறது.

வணிகர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு உருவாக்கப்பட்ட தமிழ் நாடு வணிகர் நல வாரியம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது:–

1. மாண்புமிகு தமிழக முதல்வர் – தலைவர்
2. மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் – துணைத் தலைவர்
3. **அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்:–**
   1) அரசுச் செயலர் (வணிக வரி மற்றும் பதிவுத்துறை)
   2) வணிக வரி ஆணையர்
   3) அரசு சிறப்புச் செயலர் (நிதித் துறை)
   4) அரசுச் செயலர் (தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை)
   5) கூடுதல் ஆணையர்/முதன்மைச் செயல் அலுவலர், தமிழ்நாடு வணிகர் நல வாரியம் - (உறுப்பினர் செயலர்)
4. அலுவல் சாரா உறுப்பினர்கள் – 20 வணிகர்கள்

இவ்வாரியம் தொடங்கப்பட்டபோது, வணிகர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும் வாரியத்தின் நிர்வாக செலவினங்களுக்காகவும் ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொகை பாரத ரிசர்வ் வங்கியில் (Reserve Bank of India) பதவி பெயர் வைப்புத் தொகைக் கணக்கில் வைக்கப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டித்தொகை மற்றும் உறுப்பினர்களாக சேர்க்கப்படும் பதிவுப்பெற்ற வணிகர்களிடம் இருந்து பெறப்படும் ஆயுட்கால சந்தா தொகையான ரூ.250/– மற்றும் இச் சந்தா தொகைக்கு இணையாக அரசிடமிருந்து பெறப்படும் மானியத் தொகை (Matching Grant Amount) ஆகியவைகளைக் கொண்டு இவ்வாரிய உறுப்பினர்களுக்குக் கீழ்க்காணும் நலத்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

### 17.1. குடும்பநலத் திட்டம்

வாரியத்தின் உறுப்பினர்கள் மரணமடைந்தால் அவர்களின் குடும்பத்திற்கு குடும்பத்தின் வறுமைநிலை கருதி உதவித் தொகை ரூ.50,000/– வழங்கப் படுகிறது.

### 17.2. மருத்துவ உதவி

வாரியத்தின் உறுப்பினர்களுக்கு இருதய– மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சைகளுக்கு ரூ.50,000/– வழங்கப்படுகிறது. அறுவை சிகிச்சைகளுக்கு மட்டுமல்லாமல் இருதயம், சிறுநீரகம் மற்றும் புற்றுநோய்களுக்கு மருத்துவ சிகிச்சைகளான டயாலிசிஸ், கீமோதெரபி, ரேடியேஷன்தெரபி, ஆஞ்சியோபிளாஸ்டி ஆகியவற்றிக்கும் ரூ.15,000/– வழங்கப்படுகிறது. மேலும், பெண் உறுப்பினர்களுக்கு கர்ப்பப்பை நீக்கும் அறுவை சிகிச்சைக்கு ரூ.20,000/– வழங்கப்படுகிறது.

## 17.3. கல்வி உதவி

வாரிய உறுப்பினர்களின் பிள்ளைகளில் மகன்/மகள் யாரேனும் ஒருவருக்கு கல்லூரி கல்விக்கு ரூ. 5,000/– முதுகலைப் பட்டம் மற்றும் தொழில் கல்வி பயில்வோருக்கு ரூ 10,000/– ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் வழங்கப்படுகிறது.

## 17.4. விளையாட்டு வீரர்களுக்கு உதவி

உலக அளவில், தேசிய அளவில், மாநில மற்றும் மாவட்ட அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறும் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு உதவித் தொகை முறையே ரூ.25,000/–, ரூ.10,000/–, ரூ.5,000/– மற்றும் ரூ.3,000/– வழங்கப் படுகிறது.

## 17.5. தீ விபத்துக்கு உதவி

தீ மற்றும் இயற்கைச் சீற்றங்களால் கடைகள் சேதமடைந்தால் உறுப்பினர்களுக்கு ரூ.5,000/– வழங்கப்படுகிறது.

## 17.6 மூன்று சக்கர சைக்கிள்கள் மற்றும் பெட்டிக் கடைகள்

நலிவுற்ற வணிகர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவுத்துறை தொழிலகங்கள் தயாரிக்கும் பெட்டிக் கடைகள் வாங்க அல்லது மூன்று சக்கர மிதிவண்டி வாங்க ரூ.10,000/– அளிக்கப்படுகிறது.

## 17.7 அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத் தொகை

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் மூன்று இடங்களில் வரும் வாரிய உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு ஊக்கத் தொகையாக முறையே ரூ.5,000/–, ரூ,3,000/– மற்றும் ரூ.2,000/– வழங்கப்பட்டு வருகிறது.

## 17.7 வழங்கப்பட்ட நலத்திட்டங்களின் விவரங்கள்

இவ்வாரியத்தில் வணிக உறுப்பினர்களுக்கு 31.3.2009 வரை கீழ்க்கண்டவாறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன:

| வ. எண். | நலத்திட்டம் | உதவி பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட உதவித் தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | குடும்ப நல உதவி | 315 | 78.35 |
| 2 | மருத்துவ உதவி | 38 | 8.51 |
| 3 | கல்வி உதவி | 84 | 2.21 |
| 4 | தீ விபத்து உதவி | 29 | 1.45 |
| 5 | விளையாட்டு உதவி | 2 | 0.15 |
| 6 | உயர் மதிப்பெண் உதவி | 6 | 0.20 |
| 7 | உடல் ஊனமுற்றோர் உதவி | 2 | 0.15 |
| 8 | திருமண உதவி (தற்பொழுது நடைமுறையில் இல்லை) | 2 | 0.10 |
| | **மொத்தம்** | **478** | **91.12** |

இவ்வாரியத்தில் 31.3.2009 வரை 45,494 வணிகர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். இதுவரை 478 உறுப்பினர்களுக்கு ரூ.91.12 லட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் சேர்க்கை சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டைகள் வழங்கும் பணி நடைபெற்று வருகின்றது.

## 17.9 இணையதளம்

உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் இவ்வாரியம் அளிக்கும் சேவைகளை அறிய www.tntwb.gov.in என்ற இணையதளம் ஒன்று செயல்படுகிறது.

## 18. குறை களைதல்

### 18.1. குறை தீர்க்கும் பிரிவு

வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் குறைதீர்க்கும் பிரிவு ஒன்று 1999 முதல் செயல்பட்டு வருகிறது. வணிகர்களின் குறைகள் மற்றும் புகார்களைப் பெறுகின்ற பிரிவாக அது இயங்கி வருகின்றது. இணை ஆணையர் (நிர்வாகம்) அப்பிரிவின் தலைவராகவும், கூடுதல் ஆணையர் (மக்கள் தொடர்பு) மற்றும் கூடுதல் ஆணையர் (சுய சீராய்வு மனு) ஆகியோர் அதன் உறுப்பினர்களாகவும் செயல்படுகின்றனர்.

## 18.2 தகவல் பரிமாற்றக் குரல் பதிவு முறை

துறையின் நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில், பொதுமக்களின் ஆலோசனைகள், குறைகள் மற்றும் வணிகர்களின் வரி ஏய்ப்பு விவரங்கள் குறித்த தகவல்களை உடனுக்குடன் பெறும் பொருட்டு, "தகவல் பரிமாற்றக் குரல் பதிவு செய்யும் கருவி" வணிக வரி ஆணையர் அவர்களின் அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது இவ்வசதிக்கென தனியாக 044–28520535 என்ற எண் கொண்ட நேரடி தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 18.3 இலவச அழைப்பு மையம்

துறையின் செயல்பாடு மற்றும் நடைமுறைகள் குறித்து தெளிவுரைகளைப் பெற வணிகர்களுக்கு உதவுவதற்காக சென்னையில் இலவச அழைப்பு மையம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வணிகப் பெருமக்களின் நன்மைக்காக இம்மையத்தில் தொலைபேசி எண்.30224224 மற்றும் இலவச அழைப்பு எண்.1800 425 0960 ஆகியன செயல்பட்டு வருகின்றன.

# 19. வணிகவரித் துறையின் சிறந்த நிர்வாகத்திற்கென எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகள்

## 19.1 வரி ஏய்ப்பு குறித்து தகவல் அளிப்பவர்களுக்கு பரிசு

ரூ.1 லட்சம் நிதித் தொகுப்பு உருவாக்கப்பட்டு வரி ஏய்ப்பவர் பற்றிய பயனுள்ள தகவல்களைத் துறைக்கு அளிக்கும் துறைசாரா நபர்களுக்கு பரிசுத் தொகை வழங்கும் திட்டம் வணிகவரி ஆணையரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் பயனுள்ள தகவல்கள் செயலாக்கப் பிரிவினரால் பரிசீலிக்கப்பட்டு, முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு மேற்கொண்டு வரி விதிக்கப்படுகிறது. தகவல் அளித்தவர் பற்றிய விவரங்கள் இரகசியமாக வைக்கப்படுகிறது.

## 19.2 கைபேசி இணைப்பு வழங்குதல்

வரி ஏய்ப்பு மற்றும் வாகன இயக்கம் குறித்த தகவல்களைப் பரிமாறிக் கொள்ள செயலாக்கப் பிரிவில் உள்ள துணை ஆணையர், இணை ஆணையர் மற்றும் சுழற்படை அலுவலர்களுக்கு கைபேசி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் வரிவிதிப்பு வட்ட

தலைமை அலுவலர்கள் அனைவருக்கும் மொத்தம் 391 கைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் அலுவலர்கள் தகவல் பரிமாற்றம், சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளுதல், வணிகர்களுக்கு இடையேயான பரிமாற்றங்களை குறுக்குத் தணிக்கை செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளலாம். வணிகப் பெருமக்களும் தங்களுடைய சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொள்வதற்– காகவும், வணிக நடைமுறைகளை எளிய முறையில் நடைமுறைப்படுத்தவும், வரிவிதிப்பு அலுவலர்களை நேரடியாக தொடர்பு கொள்வதற்கும் இது பயன்படும். மேலும், இது வணிகர்களுக்கான சேவைகளை மேம்படுத்தவும், வரி நிர்வாகத்தைத் திறம்பட நடத்தவும் பயன்படும்.

### 19.3 புதிய வாகனங்கள் வழங்குதல்

பழைய கழித்துக் கட்டப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக 29 புதிய வாகனங்கள் வாங்க அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், பழைய வாகனங்களுக்குப் பதிலாக 11 புதிய வாகனங்கள் வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 19.4 புதிய கட்டடங்கள் கட்டுதல்

மாநிலம் முழுவதும் தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் 241 வணிகவரித்துறை அலுவலகங்களுக்கென சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.160 கோடி வழங்கும்படி 13–வது நிதிக்குழுவின் முன் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

### 19.5. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005

1.1.2008 முதல் 31.12.2008 வரையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம்–2005ன் கீழ் 221 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அனைத்து விண்ணப்பங்களின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

## 20. பகுதி II திட்டம் 2009–2010

2009–2010 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தில் கீழ்க்காணும் புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது:-

1) சென்னை வணிகவரிப் பணியாளர் பயிற்சி மையத்திலுள்ள உள்ள கணினிப் பயிற்சி துறைக்கு ரூ.6.19 இலட்சம் செலவில் கணினி மேசைகள், நாற்காலிகள் மற்றும் UPS வாங்குதல்;

2) தற்போது கூரை வேய்ந்த கொட்டிலில் இயங்கி வரும் கன்கார் (Concor) சுற்றும்படை தணிக்கைச் சாவடியில் 7.36 இலட்சம் செலவில் கொட்டிலுக்குப் பதிலாக உலோகச்சிற்றரை அமைப்பது;

3) சென்னை கீரிம்ஸ் சாலையில் உள்ள வணிகவரித் துறை அலுவலகங்களுக்கு ரூ.22 ஆயிரம் செலவில் இண்டர்காம் தொலைபேசி வசதி செய்தல்;

4) வணிகவரித்துறையின் அனைத்து துணை மற்றும் இணை ஆணையர்களின் அலுவலகங்களுக்கு ரூ.25.04 இலட்சம் செலவில் Fax, e-mail, அச்சு, Scan, படிபெருக்கி வசதிகள் உள்ளடங்கிய, 'பல்வகைப் பயன்பாட்டுக் கருவி' (Multi Functional Device) வழங்குதல்.

**திரு சி.நா.மீ. உபயதுல்லா**
**வணிகவரித்துறை அமைச்சர்**